tnkalvi.online

No. of Printed Pages : **11**

8368

பதிவு எண்
Register Number

PART - III

புவியியல் / GEOGRAPHY

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 70

Time Allowed : 3.00 Hours] [Maximum Marks : 70

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

பகுதி - I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note : (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-12-geography-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

1. கொடுக்கப்பட்டுள்ளவற்றுள் ஒன்று அதிக மக்கள் தொகைப் பிரச்சனைக்குத் தீர்வல்ல.

(அ) இதை தேசிய பாதுகாப்பு பிரச்சனையாகக் கருதுதல்

(ஆ) தேசிய மற்றும் உலக அளவில் அதிக மக்கள் தொகை பற்றிய விழிப்புணர்வு பிரச்சாரங்களை பல ஊடகங்கள் மூலம் நடைமுறைப்படுத்துதல்.

(இ) பெரிய அளவு குடும்பத்தை ஆதரிப்பது

(ஈ) ஒற்றைக் குழந்தைக் குடும்பங்களை நோக்கமாகக் கொள்வது

One among the given is not a solution to over-population.

(a) Treating it as a National Security issue

(b) Creating and Implementing National and Worldwide Multi-Media over-population awareness campaigns

(c) Encouraging Large family

(d) Aiming for single-child Families

2. 2011 ஆம் ஆண்டுக் கணக்கெடுப்பின்படி கீழ்வருவனவற்றுள் எது சரியானது ?

(அ) கொல்கத்தாவின் மக்கள் தொகை 4% உயர்ந்தது

(ஆ) டெல்லியின் மக்கள் தொகை 4.1% உயர்ந்தது

(இ) சென்னையின் மக்கள் தொகை 5% உயர்ந்தது

(ஈ) மும்பையின் மக்கள் தொகை 5.1% உயர்ந்தது

As per 2011 census, which one of the following is correct ?

(a) Kolkata's population rose by 4%

(b) Delhi's population rose by 4.1%

(c) Chennai's population rose by 5%

(d) Mumbai's population rose by 5.1%

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-12-geography-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

3. தங்கத்தின் கண்டுபிடிப்பினால் வளர்ச்சியடைந்த மிகவும் பிரசித்தி பெற்ற குடியிருப்பு _____.

(அ) நியூயார்க் (ஆ) சான் பிரான்ஸிஸ்கோ

(இ) வாஷிங்டன் (ஈ) லாஸ் ஏஞ்சல்ஸ்

The most famous settlement which grew due to finding gold is _____.

(a) New York (b) San Francisco

(c) Washington (d) Los Angeles

4. பின்வரும் கூற்றை கூறியவர் யார் ?

''கிழக்கு ஐரோப்பாவை ஆட்சி செய்பவர்கள் மைய நிலப்பகுதியை ஆள்வார்கள், உலக தீவிற்கு கட்டளையிடும் மைய நிலப்பகுதியை ஆட்சி செய்பவர்கள் உலகத் தீவை ஆள்வார்கள், உலகத் தீவை ஆட்சி செய்பவர்கள் உலகை ஆள்வார்கள்''.

(அ) ஸ்பைக்மேன் (ஆ) ஹம்போல்ட்

(இ) மெக்கிண்டர் (ஈ) ஹட்டன்

Who stated the following ?

"Who rules East Europe commands the Heartland. Who rules Heartland commands World Island. Who rules World Island commands the World."

(a) Spikeman (b) Humboldt

(c) Mackinder (d) Hutton

5. வேறுபட்ட ஒன்றைத் தேர்ந்தெடு.

(அ) பொருட்களை வாங்குவதற்கு பைகள் அல்லது பெட்டிகளைப் பயன்படுத்தாமல் நெகிழியைப் பயன்படுத்துதல்

(ஆ) குறைந்த உறையிட்ட பொருட்களைத் தேர்ந்தெடுத்தல்

(இ) தேவையற்ற நெகிழிப் பைகள் மற்றும் உறையிட்ட பொருட்களை தவிர்த்தல்

(ஈ) மறுசுழற்சி அல்லது மறுபயன்பாடு கொண்ட பொருட்களைத் தேர்ந்தெடுத்தல்

Pick the odd one out.

(a) For buying things, using of plastic materials instead of bags or boxes

(b) Choose products with less packaging

(c) Say 'no' to unnecessary plastic bags and other packaging

(d) Choose products with recyclable or reusable packaging

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-12-geography-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

6. இவற்றில் எது தவறாக பொருந்தியுள்ளது ?

பழங்குடியினர்		பகுதி
(அ) அபோரிஜின்ஸ்	-	தென் அமெரிக்க பகுதி
(ஆ) இன்யூட்கள்	-	ஆர்டிக் பகுதி
(இ) பாலியன்	-	தென் இந்திய பகுதி
(ஈ) பிக்மிக்கள்	-	கலகாரி பகுதி

Identify the one which is incorrectly matched.

Foragers		**Region**
(a) Aborigines	-	South America
(b) Inuit	-	Arctic region
(c) Paliyan	-	South India
(d) Pygmies	-	Kalahari

7. மழைநீர் சேமிப்பானது _____ நீரின் தரத்தை அதிகரிக்கிறது.

(அ) ஆறு (ஆ) கடல்

(இ) நிலத்தடி (ஈ) பெருங்கடல்

Rainwater harvesting improves the quality of _____ water.

(a) River (b) Sea

(c) Underground (d) Ocean

8. ஒவ்வொரு _____ ஒரு மொழி இறப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

(அ) 14 மாதங்களில் (ஆ) 14 நிமிடங்களில்

(இ) 14 ஆண்டுகளில் (ஈ) 14 நாட்களில்

It is estimated that one language dies out every _____.

(a) 14 months (b) 14 minutes

(c) 14 years (d) 14 days

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-12-geography-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

9. பின்வருவனவற்றுள் எவை கனிமங்களை பாதுகாக்கும் ஒரு வழிமுறை அல்ல ?

(அ) கனிமங்களை மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாட்டிற்கு உட்படுத்துதல்

(ஆ) மக்கள் தொகை வளர்ச்சியை கட்டுப்படுத்துவதன் மூலம் கனிமங்களின் தேவையைக் குறைத்தல்

(இ) அத்தியாவசியமற்ற கனிமங்களின் பயன்பாட்டை ஊக்கப்படுத்துதல்

(ஈ) கனிம வளங்களை பாதுகாக்க சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துதல்

Which of the following is not a method of conservation of minerals ?

(a) Reusing and recycling of minerals

(b) Controlling population growth to reduce demand for minerals

(c) Encouraging the use and acceptance of minerals which are not essential.

(d) Creating social awareness regarding conservation of minerals

10. பின்வருவனவற்றுள் உலகின் அதிவேக கணினி எது ?

(அ) பிரத்யூஸ் (Pratyush)

(ஆ) சன்வே டைஹூலைட் (Sunway TaihuLight)

(இ) பரம் 10000 (Param 10000)

(ஈ) சம்மிட் (Summit)

Which of the following is the fastest computer in the World ?

(a) Pratyush

(b) Sunway TaihuLight

(c) Param 10000

(d) Summit

11. உலகளவில் இறப்புக்கான காரணிகளில் எட்டாவது இடத்தில் உள்ள நிகழ்வு எது ?

(அ) சாலை விபத்து (ஆ) கூட்ட நெரிசல்

(இ) நீரில் மூழ்குதல் (ஈ) தீ விபத்து

Which is the 8th leading cause of death globally ?

(a) Road accident (b) Stampede

(c) Drowning (d) Fire accident

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-12-geography-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

12. கடல் மட்டம் நிலையாக ஆண்டுக்கு _____ அளவில் உயர்ந்து கொண்டிருக்கிறது.

(அ) 0.01 முதல் 0.025 செ.மீ (ஆ) 0.01 முதல் 0.25 செ.மீ

(இ) 1 முதல் 2.5 செ.மீ (ஈ) 0.1 முதல் 0.25 செ.மீ

Sea level rise is occurring steadily at the rate of _____ per year.

(a) 0.01 to 0.025 cm (b) 0.01 to 0.25 cm

(c) 1 to 2.5 cm (d) 0.1 to 0.25 cm

13. பின்வருவனவற்றில் எது மிகவும் பின்தங்கிய நாடுகளின் பண்பு அல்ல ?

(அ) சமமற்ற வருவாய் பரவல்

(ஆ) குறைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி

(இ) அதிக அளவிலான வேலையின்மை

(ஈ) அதிக எழுத்தறிவு விகிதம்

Which of the following is not the characteristic of the Least Developed Countries ?

(a) Unequal distribution of income

(b) Low Gross Domestic product

(c) High level of unemployment

(d) High literacy rate

14. எதைத் தடுப்பதற்கு நமது வீட்டிற்கருகில் நிற்கும் மரங்களின் அனைத்துக் கிளைகளும் வெட்டப்படுகிறது ?

(அ) தீ (ஆ) நிலநடுக்கம் (இ) வறட்சி (ஈ) வெள்ளம்

To cut off all the branches of trees standing near our house is to prevent :

(a) Fire (b) Earthquake (c) Drought (d) Flood

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-12-geography-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

15. தன் முதல் முயற்சியிலேயே செவ்வாய் கிரகத்தை சென்றடைந்த ஒரே நாடு _____ ஆகும்.

(அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் (ஆ) சீனா

(இ) ரஷ்யா (ஈ) இந்தியா

_____ is the only one country which has reached to the Mars in its first attempt.

(a) United States of America (b) China

(c) Russia (d) India

பகுதி - II / PART - II

குறிப்பு : எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **24 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **6x2=12**

Note : Answer **any six** questions. Question No. **24** is **compulsory**.

16. 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி இந்தியாவின் பாலின விகிதம் என்ன ? இந்தியாவில் எந்த மூன்று மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் சாதகமான பாலின விகிதங்களைக் கொண்டுள்ளன ?

What is the sex ratio of India according to census 2011 ? Which three States / Union Territories have favourable sex ratio in India ?

17. கிராமப்புறக் குடியிருப்புகளின் வகைகளைப் பட்டியலிடுக.

List the types of rural settlement.

18. 'இழை வடிவ' மற்றும் 'லோட்ஸ்' கனிமப் படிவுகள் தோன்றும் முறைகளை வேறுபடுத்துக.

Differentiate the mode of occurrence of particles of veins and lodes.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-12-geography-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

19. நான்காம் நிலைத் தொழிலுக்கும் ஐந்தாம் நிலைத் தொழிலுக்கும் உள்ள வேறுபாட்டை எழுதுக.

Differentiate Quaternary and Quinary sector.

20. எதன் அடிப்படையில் இனம் வகைப்படுத்தப்படுகிறது ? அவற்றைக் குறிப்பிடுக.

On what basis the race is classified into ? Name them.

21. புவியின் அதிக சக்தி வாய்ந்த புவி உளவு செயற்கைக்கோள் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

Write a short note on the World's most powerful GEO Spy Satellite.

22. பேணத்தகுந்த மேம்பாடு இலக்கு 15 பற்றி சுருக்கமாக எழுதுக.

Write in brief about Goal 15 in Sustainable development.

23. சாலை பாதுகாப்பைக் குலைக்கும் காரணிகளில் ஏதேனும் இரண்டினை எழுதுக.

Write any two road safety risk factors.

24. குடிபெயர்தலுக்கான காரணிகளை வகைப்படுத்துக.

Classify the factors causing migration.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-12-geography-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - III / PART - III

குறிப்பு : எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **33 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **6x3=18**

Note : Answer **any six** questions. Question No. **33** is **compulsory**.

25. விரிவாக்க பிரமிடுக்கும் நிலையான பிரமிடுக்கும் இடையேயான ஏதேனும் மூன்று வேறுபாடுகளை குறிப்பிடுக.

Mention any three differences between expansive population pyramid and stationary population pyramid.

26. வளங்களை பாதுகாக்கும் வழிமுறைகளில் ஏதேனும் மூன்றினைக் குறிப்பிடுக.

Mention any three ways of conserving resources.

27. மில்லியன் நகரம் வரையறுக்கவும் மற்றும் ஓர் உதாரணம் தருக.

Define Million City and give an example.

28. முதல் நிலைத் தொழிலைக் காட்டிலும் இரண்டாம் நிலைத் தொழில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஏன் ?

Why are secondary industries more important than primary industries ?

29. தமிழ்நாட்டின் முக்கிய பேச்சு வழக்கு பற்றி குறிப்பு வரைக.

Write a note on major dialects in Tamil Nadu.

30. புவிநிலை செயற்கைக்கோள் மற்றும் சூரியநிலை செயற்கைக்கோளை வேறுபடுத்துக.

Differentiate Geostationary Satellite and Sun Synchronous Satellite.

31. காலநிலை மாற்றத்திற்கான மூன்று காரணங்களைக் கூறுக.

State any three reasons for climate change.

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-12-geography-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

32. நாம் ஏன் உப்பு நீரைக் காட்டிலும் நன்னீரில் வேகமாக மூழ்கிறோம் ?

Why are we drowning faster in fresh water than ocean water ?

33. இந்தியாவின் முக்கியமான பழங்குடியின குழுக்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக.

Write a short note on major Tribal groups in India.

பகுதி - IV / PART - IV

குறிப்பு : அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5x5=25**

Note : Answer **all** the questions.

34. (அ) எல்லைக்கோடுகளின் மரபுசார்ந்த வகைப்பாட்டை விவரிக்கவும்.

அல்லது

(ஆ) புவிப்பரப்பு சுரங்கம், துல்லிய வேளாண்மை மற்றும் துறைமுகத்துறை தானியக்கம் போன்றவற்றில் GNSS -ன் பயன்பாடுகள் குறித்து விளக்குக.

(a) Describe the Genetic classification of the boundaries.

OR

(b) Explain the applications of GNSS in the field of surface mining, precision agriculture and port automation.

35. (அ) இரும்புத் தாதுவை வகைப்படுத்தி விவரிக்கவும்.

அல்லது

(ஆ) தொழிற்சாலைகளை பணியாட்கள், மூலப்பொருள் ஆதாரங்கள் மற்றும் உரிமையாளர் அடிப்படையில் வகைப்படுத்தி அவற்றில் ஏதேனும் இரண்டு தொழிற்சாலை வகைகளை விவரிக்கவும்.

(a) Classify and describe iron ore.

OR

(b) On the basis of labour, source of raw materials, and ownership classify the industries and explain any two types of industries.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-12-geography-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

36. (அ) மக்கள் தொகைப் பரவலைப் பாதிக்கும் காரணிகள் பற்றி விரிவாக விளக்குக.

அல்லது

(ஆ) மைய மண்டல கோட்பாட்டினை படத்துடன் விளக்குக.

(a) Explain in detail about the factors influencing the distribution of population.

OR

(b) Explain the Concentric Zone theory with diagram.

37. (அ) சுற்றுச்சூழல் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான நடைமுறைகளை விளக்குக.

அல்லது

(ஆ) தீ விபத்தின்போது ஏதேனும் ஐந்து செய்ய வேண்டியவை மற்றும் செய்யக் கூடாதவை பற்றி எழுதுக.

(a) Explain the process used in the Environmental component of EIA.

OR

(b) Write any five dos and don'ts for fire accidents.

38. (அ) கொடுக்கப்பட்டுள்ள உலக நில வரைபடத்தில் உலக மக்கள் தொகை அடர்த்தி பகுதிகளைக் குறித்துக் காட்டி அதைப் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

அல்லது

(ஆ) உலகின் புறவரி நிலவரைபடத்தில் மைய நிலப்பகுதி கோட்பாட்டின் மூன்று அடுக்கு எல்லைகளைக் குறித்து குறிப்பு எழுதுக.

(a) On the outline map of the World, mark the areas of world population density and write a brief account of it.

OR

(b) On the outline map of the World, mark the three tier boundaries of Heartland theory and write a brief account of it.

- o 0 o -

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-12-geography-public-march-2025 · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

.

tnkalvi.online